பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 135 | இதழ்: 17 | பக்கங்கள்: 08 | திகதி: 28-08-2011 | விலை: 15.00

## யாழ் மறைமாவட்டத்தில் உலக இளையோர் தின கொண்டாட்டம்



இளைஞர் யுவதிகளே! சீரழியும் எம் சமூகத்தில் கிறிஸ்து இயேசுவில் வேர் ஊன்றியிருந்து மறு கிறிஸ்துக்களாக வாழ உங்களை அழைக்கின்றேன்.



இளமைப் பருவத்தில் நான் பங்குத்திருச் சபையில் பெற்ற தலைமைத்துவ உருவாக்கமே இன்று நான் நீதிபதியாக பணிபுரிய அடிப்படையானது. ஆகவே சந்தர்ப்ப வாய்ப்புக்களைப் பயன்படுத்துவீர்.



இளமையின் சக்தியை வீணாக்காதீர் இலக்கை நோக்கி நகருங்கள் - யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியம் இரண்டாண்டுகளில் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது.

அகில உலகத் திருச்சபையானது கடந்த 21ம் திகதியன்று உலக இளையோர் தினமாகக் கொண்டாடியது. இத்தினத்தை திருத்தந்தை அவர்கள் ஸ்பெயின் மத்ரித்தில பல இலட்சக்கணக்கான இளைஞர் பிரதிநிதிகளுடன் கொண்டாடிய அதே நாளில் எமது மறைமாவட்ட இளைய சமூகம் ஒன்று திரண்டு கொண்டாடியது.

இவ்விழாவிற்கான முன் தயாரிப்பு நிகழ்வுகள் பங்கு, மறைக்கோட்ட ரீதியாக நடைபெற்றன. இறுதி நாளாகிய 21ம் திகதி மறைமாவட்ட அளவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையவர்கள் யாழ் தூய ஜேம்ஸ் ஆலயத்தில் ஆயருடன் இணைந்து நன்றித் திருபபலியை ஒப்புக் கொடுத்தனர். ஆயர் அவர்கள் சீரழியும் எம் சமூக - கலாசார வாழ்வை கிறிஸ்துவுக்குள் மீட்டுக்கொள்ள இளையவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து இளையோர்கள் பதாதைகளும் தங்கள் தங்கள் இளையோர் ஒன்றிய கொடிகளை தாங்கியவர்களாக பிரதான வீதி வழியாக யாழ் பேராலயத்தை நோக்கி பேரணியாகச் சென்றனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கத்தோலிக்க இளையோர் இவ்வாறு அணி திரண்டு சென்றமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. பேராலய முன்றலில் இடம்பெற்ற இளையோர் சங்கமம் நிகழ்வில் பல்சுவை நிகழ்வுகள் இடம் பெற்றன. இளையோர் சங்கமம் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். நீதி மன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் கோலாட்டம், நடனம், நாடகம் இளையோர் எழுச்சிப் பாடல்கள் என்பன இடம் பெற்றன.

மன்னார் மறைமாவட்ட இளையோர்களும் இணைந்து வில்லுப்பாட்டு நிகழ்வை வழங்கினர்.

குருமுதல்வர் அவர்களின் சிறப்புரையும் இடம் பெற்றது. போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை யாழ். மாவட்ட நீதிபதி அவர்கள் வழங்கினார்.

இவ் இளையோர் தின நிகழ்வை மறைமாவட்ட இளையோர் ஆணைக் குழு இயக்குநர் அருட்பணி. இரவிச்சந்திரன் அடிகள் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## "துன்புறுவோரைக் காணும் போது விலகி ஒதுங்காதீர்கள், இறைவன் உங்களிடமிருந்து சிறந்தவைகளை எதிர்பார்க்கிறார்"

### உலக இளையோரிடம் இவ்வாறு கூறினார் திருத்தந்தை

16ம் பெனடிக்ட். திருத்தந்தையின் பிரசன்னத்தில் இதுவரை நடைபெற்ற 26வது உலக இளையோர் தின நிகழ்ச்சிகளில் இம்முறைச் சிலுவைப் பாதை பக்தி முயற்சி, முதல் மாபெரும் திருச்சபை நிகழ்ச்சியாகும். இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள், சிலுவை மரணம், உயிர்பபு ஆகியவற்றைத் தியானிக்க அழைக்கின்றது சிலுவைப பாதை பக்தி முயற்சி. இஸ்பானிய பக்தி முயற்சிகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் இதில் கலந்து கொண்ட இளையோர் உள்ளத்தை உருகச் செய்யும் பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். உலகமே மத்ரித்துக்கு வந்து விட்டதாகவும், மத்ரித் நகர், இபேரியன் புனித வாரத்தை, குறிப்பாக, சிலுவைப் பாதையை உலக மேடையில் காட்டியதாகவும் கூறினர். இச்சிலுவைப்பாதையின் 14 நிலைகளின் காட்சிகள் தத்வரூபமாக மரத்தாலான சிலைகளால் வடிக்கப் பட்டிருந்தன. உலக இளையோர் தினத்தின் பிரம்மாண்டமான மரச் சிலுவை, இச்சிலுவைப் பாதையின் முதல் நிலையின் முன்னர் கொண்டு வரப்பட, "அன்பு எங்கே இருக்கின்றதோ" என்று பொருள் படும் பாடலை, உலக இளையோர்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இயல்பு நிலையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கின்றோம்

### நாவாந்துறை சம்பவம் குறித்து யாழ். ஆயர்

வடக்கு கிழக்கு, மற்று மலையக பகுதிகளில் அண்மைக் காலமாக நடமாடி வரும் மர்ம மனிதர் தொடர்பான சம்பவங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதிக்கின்றன. போர் ஓய்ந்து மெல்ல மெல்ல வழமை நிலைக்கு திரும்பி வரும் சாதாரண மக்களுடைய நிம்மதியான வாழ்வை சீர்குலைக்கும் இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது மறைமாவட்டத்தின் பாரம்பரிய கத்தோலிக்க கிராமமாகிய நாவாந்துறையில் நடைபெற்ற சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளமை எனக்கு மிகுந்த மன வேதனையைக் கொடுத்துள்ளது.



பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் மக்களின் நலனைப் பேணி பணி செய்ய வேண்டியவர்கள் என்பதை நினைவூட்டுகின்றோம். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சம்மந்தப்பட்ட சகல தரப்பினரதும் கடமையும், பொறுப்புமாகும். பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் நலமடைந்து விடுதலையாக வேண்டும் என. ஆசிக்கின்றேன்.

## கிளி. முல்லை மாவட்டத்தில் இளையோர் தினம்

உலக இளையோர் தினத்தை முன்நோக்கி அதற்கான ஆயத்தங்களை பல் வேறு வழிகளில் எமது மறைமாவட்டமானது முன்வைத்தது. அந்த வகையில் மறைக்கோட்ட ரீதியாக இந் நிகழ்வை சிறப்பிக்கும் விதமாக மறைக்கோட்டத்தில் உள்ளடங்கும் பங்குகளுக்கு இளையோர் திருச்





சிலுவைப் பயணம் ஒன்று ஒவ்வொரு பங்கு ரீதியாக முன்னெடுக்கப்பட்டது. இந்த வகையில் 7ம் திகதி ஆகஸ்ட் மாதம் 2011 மறைக் கோட்ட ரீதியான இளையோர் திருச்சிலுவைப் பயணம் வலைப்பாட்டு பங்கில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த பயணம் எமது மறைக் கோட்டத்தில் உள்ள 14 பங்குகளுக்கும் முன் நெடுத்துச்செல்லப்பட்டு இறுதியாக கடந்த ஆகஸ்ட், 20ம் திகதி மறைக்கோட்ட ரீதியான

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# மக்கள் ஏன் வீதியில் இறங்கினார்கள் ?

யுத்தத்தின் பின்னரான காலகட்டம் என்பது அமைதியாக இருக்கும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக காணப்பட்டது. சர்வதேசம்கூட அவ்வாறான நம்பிக்கையுடன்தான் இருந்தது. ஆனால் யுத்தம் நடைபெற்ற காலத்திற்கும் அதன் பின்னரான நிலை என்பதற்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதாக தெரியவில்லை.

இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று முப்பது ஆண்டுகளுக்கும் மேலான இனப்பிரச்னைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இரண்டாவது நாட்டில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம்பவங்கள் ஒருவித அச்ச உணர்வுகளை மக்களிடையே தோற்றுவித்திருக்கின்றன.

முதலாவது காரணத்தை ஒரு நீண்டகாலப் பிரச்சினை என்ற அடிப்படையில் நோக்க வேண்டும். ஆனால் இரண்டாவது காரணம்தான் கடந்த சிலவாரங்காளாக மக்கள் மத்தியில் குறிப்பாகப் பெண்கள் மத்தியில் பீதியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதாவது மர்ம மனிதர்கள் - கிறீஸ் பூசிய மனிதர்கள் விவகாரம் இன்று இது தலைவிரித்தாடுகின்றது. ஆரம்பத்தில் மலையகத்தில் ஆரம்பித்து பின்னர் கிழக்கு மாகாணம்வரை சென்று கடந்த சில நாட்களாக வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் அது தொடர்பான அச்சம் தோன்றியுள்ளது. நாவாந்துறையில் கடந்தவாரம் நடைபெற்ற சம்பவத்தில் மக்கள் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டமை மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸார் உரிய முறையில் செயற்பட மறுக்கின்றனர் அல்லது செயற்படவில்லை என்றுதான் மக்கள் கூறுகின்றனர்.

மக்களினால் மடக்கி பிடித்து கொடுக்கப்பட்ட மர்ம மனிதர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர் அல்லது விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் என்று மக்கள் நம்புகின்றனர். இதனால்தான் பொலிஸ் நிலையங்களை மக்கள் முற்றுகையிட்டு தாக்குகின்றனர். இதனால் பலகுழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

எதிர்கட்சிகள் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகின்றன. அரசாங்கத்தின் வேறு நிகழ்ச்சி நிரல்களுக்காக பாதுகாப்பு தரப்பினர் மர்ம மனிதன் விவகாரத்தை தூண்டிவிட்டு மக்களைக் குழப்பித் திசை திருப்புகின்றனர் என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனால் அரசாங்கம் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. கிழக்கிலும் மலையகத்திலும் மேலும் விசேட அதிரடிப்படை முகாம்களை அமைப்பதற்கு மர்ம மனிதர்கள் கிறீஸ் பூசிய மனிதர்களைக் காண்பிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லையென அமைச்சர் கெஹெலிய ரம்புக்கல கூறியிருக்கின்றார்.

மர்ம மனிதர்களுக்கு எதிராக மக்களினால் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களை அவதானிக்கும்போது அதன் பின்னணியில் எந்த அரசியல் கட்சிகளும் இல்லை என்பது தெளிவாகின்றது. பொதுவாக இலங்கையில் மக்கள் போராட்டம் அல்லது மக்கள் எழுச்சி என்றால் அதன் பின்னணியில் அரசியல் கட்சி அல்லது ஏதேனும் ஓர் அமைப்பு செயற்படும். ஆனால் மர்ம மனிதர்கள் விவகாரத்தில் மலையகத்திலும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் நடாத்தப்பட்ட எதிர்ப்பு போராட்டங்கள் அந்தந்த பிரதேச மக்களினால் உடனடியாக நடத்தப்பட்டிருக் கின்றது. தங்கள் பிரதேசங்களுக்குள் வந்து பெண்களை விரட்டுவதா என்ற ஆத்திரத்துடன் மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். சட்டத்தை கையில் எடுத்துள்ளனர்.

மக்களின் இந்த இயல்பான போராட்டங்களுக்கு அரசாங்கம் பதில் சொல்லியாக வேண்டும். மர்ம மனிதர்கள் விவகாரத்துக்கும் படைத்தரப்புக்கும் தொடர்புகள் இல்லை என்றோ அல்லது விஷமிகளின் வதந்திகள் என்றோ வெறுமனே மறுப்பு தெரிவித்துவிட்டு இருக்க முடியாது. ஏனெனில் மக்கள் வீதியில் இறங்குவதற்கு வேறு காரணங்கள் இல்லை. ஆகவே உண்மை வெளிப்பட வேண்டும். மக்கள் நிம்மதியடைய வேண்டும். மக்களுக்காகவே அரசு என்பதை நிலை நாட்டுங்கள்.

அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்

# உலக இளையோர் தின நிகழ்வுகளில் அமெரிக்க ஆயர்களின் உரை

உணர்வுகளின் அடிப்படையில் மட்டும் கிறிஸ்துவுடன் நமது உறவை வளர்ப்பது உண்மையாகவும், உறுதியாகவும் இராது என்று பில்லாடெபியா உயர் மறைமாவட்டத்திற்கு நியமனம் பெற்றுள்ள பேராயர் சாள்ஸ் செப்பற் கூறினார்.

உலக இளையோர் தின நிகழ்வுகளையொட்டி மத்ரிதில் கூடியிருக்கும் இளையோரில் ஆங்கிலம் பேசும் ஆயிரக்கணக்கான இளையோருக்கு இப்புதன் மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றுகையில் பேராயர் சாள்ஸ் இவ்வாறு கூறினார்.

கிறிஸ்துவை எவ்வளவு நெருக்கமாகப் பின்பற்ற முடியும் என்பதிலும், அவரை பிறருக்கு எடுத்துச் சொல்லும் மன உறுதியுமே நாம் எவ்விதம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்பதை உறுதி செய்யும் என்று பேராயர் சாள்ஸ் இளையோரிடம் கூறினார்.

இதற்கிடையே. மத்ரிதியில் கூடியுள்ள அமெரிக்க இளையோரிடம் பேசிய நியூயார்க் பேராயர் திமோத்தி அண்மையில் நியூயார்க் மாநிலம் ஒரே பாலின திருமணங்களை சட்டமாக்கியது அங்குள்ள கத்தோலிக்க குடும்பங்களையும், இளையோரையும் பெரிதும் பாதிக்கும் என்று எச்சரித்தார்.

நன்னெறிகளுக்கு எதிராக உலக அரசுகள் உருவாக்கும் பல சட்ட திட்டங்களுக்கு ஒரு மாற்றாக, ஆண், பெண் திருமண உறவில் நிலைத்திருந்து உலகிற்கு மாற்று சாட்சிகளாக வாழ்வது இளையோருக்கு வீடுக்கப்பட்டுள்ள ஒரு சவால் என்று பேராயர் திமோத்தி சுட்டிக் காட்டினார்.

# சிக்குன் குனியா நோய்க்கான மருந்து கண்டுபிடிப்பு

கடும் காய்ச்சலோடு மூட்டு வலியை ஏற்படுத்தும் சிக்குன் குனியா காய்ச்சலுக்கான தடுப்பூசி மருந்தை அமெரிக்க விஞ்ஞானிகள கண்டுபிடித்துள்ளனர்.

சிக்குன் குனியாவை தடுக்க வழி செய்யும் மருந்தை கண்டுபிடித்துள்ள அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்த மருந்து ஆய்வுக் கூடங்களில் எலிக்கு பயன்படுத்தப்பட்டு அதில் வெற்றி காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட சிக்குன் குனியா நுண்கிருமியைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த மருந்து, மனிதர்களில் எவ்விதத்தில் வேலை செய்கிறது என்பது உள்ளிட்ட சோதனைகள் முடிந்த பின் இதற்கு அனுமதி கிட்டும் எனவும், இந்தத் தடுப்பூசி தயாரிப்புச் செலவு குறைவு எனவும் டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானி ஸ்காட் வீவா தெரிவித்துள்ளார்.

# கடவுளை இழந்துள்ளதே கலவரங்களுக்கு காரணம்

## - இங்கிலாந்து ஆயர்

கடவுளையும், கிறிஸ்துவத்தையும இங்கிலாந்து இழந்துள்ளதால், நன்னெறி மதிப்பீடுகளையும் இழந்து நிற்கிறது என்று இங்கிலாந்தின் லீட்ஸ் மறைமாவட்ட ஆயர் ஆர்த்தூர் றோச் கூறினார்.

மத்ரிதில் நடைபெறும் உலக இளையோர் தின நிகழ்வுகளில் கலந்து கொள்ள சென்றிருக்கும் ஆயர் றோச், வத்திக்கான வானொலிக்கு இப்புதன்று அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மைய இங்கிலாந்து கலவரங்கள் பற்றி ஆயர் அவர்களிடம் கேட்டபோது, இங்கிலாந்தில் உள்ள இளையோர், கடவுள், மதம் ஆகியவற்றை இழந்து வாழ்வதால் அவர்களிடம் வளர்ந்து வரும் ஏமாற்றம், விரக்தி ஆகியவைகளே இக்கலவரங்களில் அவர்களை ஈடுபடுத்தியது என்று ஆயர் றோச் தெளிவுபடுத்தினார்.

இளையோர் மாநாட்டைப் பற்றி அவர் கூறுகையில், மத்ரிதில் தற்போது நிகழ்வன இளையோர் மத்தியில் நம்பிக்கையை வளர்க்கும் காட்சிகள் என்றும், இந்தக் காட்சிகளை உலகிற்கு விளம்பரப்படுத்த உலகின் முக்கியமான தொடர்பு சாதன நிறுவனங்கள் அங்கு இல்லாதது பெரும் குறையே என்றும் லீட்ஸ் ஆயர் றோச் மேலும் கூறினார்.

இதற்கிடையே, இங்கிலாந்து கலவரங்களால் பாதிக்கப்பட்டோருக்கென முதல்தர கிறிஸ்தவ வானொலி (Premier Christian Radio) என்ற நிறுவனம் வெஸ்ற்மிஸ்றறி கடந்த புதனன்று ஏற்பாடு செய்திருந்த திருவிழிப்புச் சடங்கில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.

பல்வேறு கிறிஸ்தவ சபைகளும் இணைந்து நடத்தும் இந்தத் திருவிழிப்பு, சமுதாயத்தில் நம்பிக்கையை வளர்க்க நாம் எடுத்துள்ள முதல் முயற்சியே என்று இக் கூட்டத்தில் பேசிய சவுத்வோக் ஆயர் கிறிஸ்தோப்பர் செஷோன் கூறினார்.

# மத்ரித் இளையோர் தினக் கொண்டாட்டங்களில் இளையோரின் நடவடிக்கை பாராட்டுக்குரியது

மத்ரித் நகரில் நடைபெற்ற இளையோர் தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட இளையோரின் நடவடிக்கைகள் குறித்து பெருமைப்படுவதாக இந்நிகழ்ச்சி பொறுப்பானவர்கள் அறிவித்துள்ளனர்.

இளையோர் தினக்கொண்டாட்டத்தில் உலகம் முழுவதிலுமிருந்தும் கலந்து கொண்டவர்களின் ஒழுங்கு முறை நடவடிக்கைகளும், எவ்வித அசம்பாவிதங்களுமின்றி இந்நிகழ்வு இடம்பெற்றது பெருமைக்குரிய ஒன்றாக இருந்ததாக, செய்தியாளர்களிடம் பேசிய உலக இளையோர் தினத்திற்கான தகவல் தொடர்புத்துறை இயக்குனர் மரியெத்தர் அறிவித்தார்.

இளையோர் தினக் கொண்டாட்டத்தில் பங்கு பெற்றோர் அனைவரும் நல்லதொரு அனுவத்தைப் பெற்றுச் சென்றனர்.

# இறைவாக்கினர் இளைஞர்களுக்கு காட்டும் வாழ்வு நெறி

அருட்பணி. அலோசியஸ் சேவியர்

பழைய ஏற்பாட்டில், இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் இறைவாக்கினர் முக்கிய இடம் பெற்றிருந்தனர். மோசே முதல் இறுதி இறைவாக்கினர் மலாக்கி வரை அனைவரும் இஸ்ரயேல் மக்களின் சமய, சமுதாய, பொருளாதார, அறநெறி வாழ்வுக்கு சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ்ந்தனர். இறைவாக்கினர்களின் பணி மூன்று முக்கிய பண்புகளைக் கொண்டிருந்தது. **1. இறைவாக்கினர் இறைவனின் வார்த்தையை மக்களுக்கு எடுத்துக் கூறினர். 2. சமூக அநீதியை எதிர்த்துப் போராடினர். 3. உண்மை கடவுள் வழிபாடு என்ன என பதைக் கூறினர்.** இறைவாக்கினரின் இந்த மூன்று பணிகளும் இன்றைய இளைஞர்கள் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிக்கு வழிகாட்டுகின்றன.

**1. இறைவாக்கினர் கடவுளின் வார்த்தையைப் போதித்தவர்கள்**

வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சூழ்நிலையில் கடவுள் மக்களுக்கு கூற விரும்பிய செய்தியை மக்களுக்கு எடுத்துக்கூற கடவுளால் அழைக்கப்பட்டவர்களே இறைவாக்கினர் ஆவர். தம் பணியின் மூலம் கடவுள் நிறுவ விரும்பும் சமய, நீதி நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதில் இறைவாக்கினர் பெரும் பங்காற்றினர். இறைவாக்கினர் கடவுள் கூற விரும்பியதையே மக்களுக்கு எடுத்துக் கூறினர். எடுத்துக்காட்டாக இறைவன் எரேமியாவை இறைவாக்கினராக அழைத்தபோது, "யாரிடம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல்; எவற்றைச் சொல்லக் கட்டளையிடுகின்றேனோ அவற்றைச் சொல்" *(எரே 1:5)* என்றார். இதே போன்று தான் இறைவாக்கினர் எசேக்கியேலிடம், "மக்கள் செவிசாய்த்தாலும் செவிசாய்க்காவிட்டாலும் நீ என் சொற்களை அவர்களுக்கு எடுத்துக்கூறு" *(எச 2:6 - 8)* என்றார். ஆமோஸ் இறைவாக்கினரும் கடவுளின் வார்த்தையைப் போதிக்க அழைக்கப்பட்டவர். ஆமோஸ் இறைவாக்கு உரைத்தபோது குருவாகிய அமேசியா அவரை வன்மையாக எதிர்த்தார். பெத்தேலில் ஒருபோதும் இறைவாக்கு உரைக்காதே என்றார். ஆனால் ஆமோஸ், "என்னை ஆண்டவர் தேர்ந்தெடுத்து என் மக்களாகிய இஸ்ரயேலிடம் சென்று இறைவாக்கு உரைத்திடு" என்று என்னை அனுப்பினார் என்றார் *(ஆமோ 7: 12,15).*

இறைவாக்கினர் கடவுளின் வார்த்தையை போதித்தனர். மக்களை நல்வழிப்படுத்த கடவுள் தரும் அறிவுரைகளை மக்களுக்கு எடுத்துரைத்தனர். ஆனால் மக்கள் கடவுளின் திட்டமல்ல தங்கள் திட்டப்படியே நடக்க வேண்டும். தங்கள் விருப்பமே நிறைவேற வேண்டும் என்று விரும்பினர். இறைவாக்கினர் எரேமியா காலத்தில் பாபிலோனியர்கள் எருசலேமைக் கைப்பற்ற பெரும் படையுடன் வந்தனர். எருசலேமின் அரசன், குருக்கள், அரசியல் தலைவர்கள், மக்கள் அனைவரும் அண்டை நாடான எகிப்பதின் உதவியுடன் பாபிலோனியரை எதிர்த்துப் போராடத் திட்டமிட்டனர். ஆனால் கடவுளின் வார்த்தை எரேமியாவின் வழியாக அருளப்பட்டது. பாபிலோனியரின் படையெடுப்பு யூத மக்கள் பாபிலோனியருக்கு அடிபணிந்து செல்வதே தண்டனையிலிருந்து தப்ப வழி . பாபி லோனியா மன்னன் யூத அரசனையும் எருசலேம் மக்களையும் நாடுகடத்துவான். எருசலேம் நகரும் அதன் கோயிலும் அழிக்கப்படும் என்று எரேமியா கூறின்ார். ஆனால் அரசனும் மக்களும் எரேமியா வழியாக கடவுள் கூறிய வார்த்தைகளைக் கேட்கவில்லை. எரேமியா மீது கடும் கோபம் கொண்டு அவரை சிறையில் அடைத்தனர். பாழும் கிணற்றில் தள்ளினர். இறைவனின் வார்த்தையைக் கேட்க மறுத்த அரசன் எருசலேமிலிருந்து பாபிலோனிய மன்னனால் சிறைப்படுத்தப்பட்டான். அவன் கண்முன்னே அவன் மக்களைக் கொன்றான். யூத அரசனின் கண்களைப் பிடுங்கி குருடாக்கி அவனை பாபிலோனியாவுக்கு அழைத்துச் சென்றான். யூத மக்கள் பாபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். எருசலேமும் அதன் கோவிலும் தரைமட்டமாக்கப்பட்டது.



ஆனால் இறைவனின் வார்த்தையைக் கேட்டு அவருக்குக் கீழ்ப்படிந்த மக்களும் இருந்தனர். எடுத்துக்காட்டாக பாபிலோனியாவிலிருந்து திரும்பி வந்த மக்கள் தரைமட்டமாக்கப்பட்டிருந்த எருசலேம் கோவிலை கட்டி எழுப்ப ஆர்வம் காட்டவில்லை. இடிந்து விழுந்து கிடந்த தங்கள் வீடுகளைக் கட்டுவதிலும் புதர் மண்டிக்கிடந்த தங்கள் வயல் வெளிகளை சரி செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். கடவுளின் வாக்கு ஆகாய் இறைவாக்கினருக்கு அருளப்பட்டது. ஆகாய், "மலைக்குச் சென்று மரம் கொண்டு வாருங்கள் என் இல்லத்தை மீண்டும் கட்டி எழுப்புங்கள் என்று சொல்கிறார் ஆண்டவர்" என்று கூறினார் *(ஆகாய் 1:8).* அவர்களும் இறைவாக்கினரின் வார்த்தையைக் கேட்டு தங்கள் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்தைக் கட்டும் பணியை மேற்கொண்டனர் *(ஆகாய் 1:14).*

இறைவனின் வார்த்தையை போதிப்பது திருமுழுக்குப் பெற்ற அனைவரின் கடமையாகும். திருமுழுக்குப் பெற்ற அனைவருமே இறைவாக்கினராக அழைக்கப்பட்டவர்கள். கடவுளின் வார்த்தையை பிறருக்கு எடுத்துக் கூற கடமைப்பட்டவர்கள். வாய்மொழியால் மட்டுமல்லாமல் நமது உண்மை கிறிஸ்தவ வாழ்வாலும் பிறருக்கு சிறந்த போதனையை வழங்க முடியும். புனித பவுல் இளைஞர் திமொத்தேயுவுக்கு கூறிய வார்த்தைகள் இன்றைய இளைஞர்களுக்கு பொருத்தமான அறிவுரையாகும். "இறைவார்த்தையை அறிவியும். வாய்ப்புக்கு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாய் இரு" *(2 திமொ 4:2).* மக்களுக்கு இறைவனின் வார்த்தைகளைப் போதிப்பது சில சமயங்களில் துன்பத்தைக் கொண்டு வரலாம். ஆனால் எரேமியாவைப் போன்று துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் துணிவும் தேவை.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# வளரும் வன் மனநிலை

அவ்வப்போது நாம் வாசிக்கின்ற சில செய்திகள் நம்மை அதிர்ச்சியடைய வைக்கின்றன. சில மாதங்களுக்கு முன் திருச்செஙகோட்டில் 11ஆம் வகுப்பு மாணவன் விளையாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யும் லோகநாயகி என்னும் பெண்மணியைத் துபபாக்கியால சுட்டான் என்ற செய்தி அவற்றுள் ஒன்று (தினகரன் 18-01-2008).

சில மாதங்களுக்கு முன்பு அபிஷேக் தியாகி என்னும் 14 வயது பள்ளி மாணவனை அவனது வகுப்புத் தோழாகள் இருவர் துப்பாக்கியால் சுட்டுககொன்ற செய்தி வட இந்தியாவில் பெரும் பரபரபபை ஏற்படுத்தியது. கடந்த ஆண்டு செல்போன் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரு மாணவர்கள் ஒரு சிறுவனைக் கடத்திச் சென்று, பின்னர் பயத்தில் அவனைக் கொன்ற செய்தி நம்மை உறைய வைத்தது.

என்ன நடக்கிறது நம் இளைய சமுதாயத்திற்கு? மாணவர்கள், இளைஞர்கள் வன்முறையாளர்களாக மாறிவருகின்றனா என்று எச்சரிக்கை மணி அடிக்கின்றனர் உளவியல் ஆய்வாளர்கள். இதற்கு ஆதாரமாக சில புள்ளி விவரங்களையும் முன் வைக்கின்றனர். குழந்தைகளின் மனச்சிக்கல்கள் கடந்த 10 ஆண்டுகளில் 400 விகிதம் அதிகரித்திருப்பதாக இந்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. இனி வரும் காலங்களில் உளவியல் நோய்கள் 50% அதிகரிக்கப் போவதாகவும், 2020ஆம் ஆண்டு வாககில் இறப்பின் காரணிகளில் 5-ல ஒன்றாக மன நோய் இருக்கும் என்றும் உலக சுகாதார நிறுவனம் சுடடிககாட்டியுள்ளது. டெல்லியல் நடத்திய ஆய்வு ஒன்று மாணவர்களில் 40 விகிதத்தினர் மன உளைச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறிந்துள்ளது.

வன்மனநிலை (Aggressive behaviour) மாணவர்களிடையே வளர்ந்து வருவதற்கான காரணிகளாகப் பின்வருவனவற்றை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**1. தொலைக்காட்சி:** சிறு வயதிலிருந்தே தொலைக்காட்சி பார்க்கும் மாணவர்கள் தங்கள் 15 வயதுக்குள் பத்தாயிரத்துக்கும் அதிகமான வன்முறைக் காட்சிகளைத் தங்கள் மனதில் பதிய வைக்கின்றனர். இக்காட்சிகள் வன்முறை பற்றிய எளிதான மனநிலையை உருவாக்குகின்றன. பிறரது துன்பம், இரத்தம், அழுகை போன்றவை இம் மாணவர்களின் மனதில் குறைவான சலனத்தையே உணடாக்குகின்றன.

**2. இணைய தளம்:** இன்றைய இளந்தலைமுறையினர் வலைதளத்தின் மூலம் பாலியல் வன்முறைகளை, வக்கிரங்களைப் பார்க்கின்றனர். இது அவர்களைப பாலியல் ரீதியாக வன்சிந்தனையாளர்களாக மாற்றுகிறது. பெண்களைப் பாலியல் பொருள்களாகவே பார்க்கப் பழகுகின்றனர்.

**3. கம்ப்யூட்டர் விளையாட்டுகள்:** இன்று ஏராளமான நகர்ப்புற மாணவர்களின் முக்கிய பொழுதுபோக்கு கணிப்பொறி விளையாட்டுகள். கணினி மையங்களுக்குச் சென்று காசு கொடுத்து விளையாடுபவர்களும் உண்டு. அலைபேசியிலேயே விளையாடுபவர்களும் உண்டு. தொலைகார நகரம், ஆயுத மனிதன், இரத்தப் பணம், துப்பாக்கிச் சூனியக்காரி... என்று இந்த விளையாட்டுகளின் பெயரிலேயே இவ்வளவு வன்முறை இருக்கிறது. விளையாட்டுகளில் இத்தனை ஆயுதங்களைப் பயன்படுத்தி விளையாடும் சிறுவர்களின் கையில் உண்மையான ஆயுதங்கள் கிடைத்தால் அவற்றைப் பயன்படுத்தத் தவறமாட்டார்கள் எனபதன் அடையாளம் தான் நாம் கேள்விப்படும் செய்திகள்.




குமார்ராஜா

**4. குடி, போதைப் பழக்கம்:** நகர்ப்புற மாணவர்கள் குடி, போதை போன்ற பழக்கங்கள் அவர்களை வன் மனநிலையாளர்களாக மாற்றுகின்றன. போதைப் பொருள்களை வாங்கப் பணம் கிடைக்காத போது வன்முறையை மாணவர்கள் பயன்படுத்துகின்றனர்.

**5. பெற்றோரின் கண்காணிப்பின்மை:** இன்றைய விரைவு வாழ்கையில் பெரும்பாலான பெற்றோர்களுககுத் தம் பிளளைகளைக கண்காணிக்க முடிவதில்லை. படிப்பு, அதிக மதிப்பெண் போன்றவற்றில் அக்கறை செலுத்தும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள், மன நிலைகள், உணர்வுகள், தோழர்கள், பொழுதுபோக்குகள் போன்றவற்றை கவனிக்கத் தவறிவிடுகின்றனர். அறியாமையே இதன் காரணம். இதன் விளைவாகத் தீய பழக்கஙகளும், வன்முறை மனநிலையும் மாணவரிடம் உருவாகிவிடுகின்றன.

**6. நவீன உணவுகள்:** உணவியல் நிபுணர்கள் தரும் ஒரு வியப்பான செய்தி இது. இன்றைய விரைவு உணவு, பளபள தாளில் அடைக்கப்பட்ட சிப்ஸ் போன்ற உணவு வகைகள் மாணவர்களுக்கு உளைச்சல், முன் கோபம் போன்றவற்றைத் தருகின்றன. நம் இளைஞர்கள் அடிக்கடி இந்த உணவு வகைகளைத் தான் அதிகமாக விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

**7. தோழர்களின் தொந்தரவு:** மாணவர்களின் தீய பழக்கங்கள் பலவும், குறிப்பாக போதைப் பழக்கம், கம்ப்யூட்டர் விளையாட்டுகள், உணவு வகைகள் முதலியன பள்ளித் தோழர்களின் அழுத்தத்தினால் வருபவை என்பதை மாணவர்களே ஒத்துக் கொள்கின்றனர். தோழர்கள் முன்னிலையில் தங்களை 'ஹீரோக்களாக' காட்டிக் கொள்ள விரும்பும் மாணவர்களும் வன்முறை மனநிலையை வெளிப்படுத்துகின்றனர்.

**8. வாசிக்கும் பழக்கம் குறைதல்:** மாணவரிடையே குறைந்து வரும் வாசிக்கின்ற பழக்கம் இன்னொரு காரணமாகக் கூறப்படுகிறது. வாசித்தல் மனதைச் செம்மைப்படுத்துகிறது. கற்பனை, படைப்பாற்றல், சிந்தனை போன்றவற்றை வளர்க்கிறது. இந்தப் பழக்கம்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## காவலன் கண்மணிகள்



### நல்ல சூழ்நிலைகள் நல்லதைத் தரும்

ஜாக் லாவோன் என்ற சிறுவன் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது நோயாளி போல மெலிந்து மோசமாகக் காணப்பட்டான். மூக்குக் கண்ணாடி அணிந்து கொண்டு மிகவும் அசிங்கமாகத் தோற்ற மளித்த அவனை எல்லாரும் கிண்டல் செய்யவே, பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விட்டான். வாழ்க்கையே இருளாகிப் போனதாக எண்ணி வீட்டில் முடங்கிக் கிடந்தான். அச்சமயம் அவன் ஒரு சொற்பொழிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டான். உடல்நலம் பற்றிய அச்சொற்பொழிவில் உடற்பயிற்சி மூலம் எப்படி நலமாக வாழலாம் என்று பேசப்பட்டது. அந்தப் பேச்சு அவனைத் தூண்டியது, சிந்திக்க வைத்தது. வீட்டிற்கு வந்தவன் நன்றாக உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தான். தொடர்ந்து விடாது செய்தான். கலிபோர்னியா, ஓர் லேண்டு மாகாணங்களில் வீடு வீடாகச் சென்று புதிய உடற்பயிற்சிகள் பற்றி எடுத்துரைத்தான். அமெரிக்காவின் பிரபல்யமான முதல் உடற்பயிற்சி மையத்தைத் தொடங்கி 'மிஸ்டர் எக்ஸர்சைஸ்' என்று எல்லாராலும் பாராட்டப் பெற்ற அவர் இன்று தேசிய சர்வதேச அளவில் சாதனையாளர், கோடீஸ்வரர்.

நல்ல உரையாடல்களோ, நல்ல சம்பவங்களோ, நல்ல புத்தகங்களோ அல்லது நல்ல பொன் மொழிகளோ கூட மனிதர்களது மனதை மாற்றி அவர்களை அடையாளம் காட்டலாம். நமது இன்றைய தேவை நல்ல சூழ் நிலைகளை உருவாக்குவது தான.

பரிதாபப்படும் நிலையில் இருப்பதை விட மற்றவர்கள் பொறமைப்படும்படியான நிலையில் இருப்பது நல்லது.

- ஹெரோடோஸ்

## சிரிப்பு வெடி

**ஆவணி 15ம் நாள் மாதா திருநாளின் போது....**

**பங்குத்தந்தை :** என்ன! மர்ம மனிதர்கள் கூட்டம் ஒன்று ஆலயத்திற்குள் நுழைந்துள்ளது! கிறிஸ் பூதங்களா!!

**பங்கு மகன்:** கிறிஸ் பூதங்கள் அல்ல பாதர் இவர்கள் திருவிழா கிறிஸ்தவர்கள்! பெரு நாளுக்கு மட்டும் ஆலயத்துக்கு வருவோர் இவர்களை உங்களுக்கு தெரியாதா?


**மறையாசிரியர் :** இராயப்பர் ஏன் யேசுவை மும்முறை மறுதலித்தார்?

**மாணவன் :** அவருடைய மாமியாரை யேசு குணப் படுத்திவிட்டாரே என்ற கோபத்தில்....

**ஆனையூரான்**

## இளையோர் தின பதிவுகள்





## திருப்தி

சேவியர் அந்தோனி



தவம் கிடந்தான் பக்தன்.
கடவுள் மனமிரங்கினார்.
பக்தனைத் திருப்திப்படுத்த முடிவெடுத்தார்.
அவன் முன் தோன்றினார்:

'பக்தா...
உன் பக்தியை மெச்சினோம்.
இதோ என் பரிசு....!'

வீட்டிலுள்ள ஒரு அரிசி மூட்டையை
ஆள்காட்டி விரலால் தொட்டார்.
அப்படியே பொன்னானது.

பக்தன் முகம் பிரகாசமானது.
ஆனால் திருப்தி இல்லை.
அருகிலுள்ள கட்டிலைத் தொட்டார்.
அதுவும் பொன்னாது.

பக்தன் முகத்தில் திருப்தி இல்லை.
பார்த்தார் கடவுள்.

வீட்டிலுள்ள எல்லாப் பொருட்களையும்
ஓடி ஓடித் தன் ஆள்காட்டி விரலால் தொட்டார்
கடவுள்.

பெருமிதத்தோடு பக்தனைப் பார்த்தார்:

'பார்த்தாயா பக்தா...!'
பக்தன் முகத்தில் நிறைவான திருப்தி
இன்னும் வரவே இல்லை.

கடவுள் கேட்டார்:

'பக்தா...!'
உனக்கு என்ன தான் வேண்டும்?
சொல்லித் தொலை.'

பக்தன் திருவாய் மலர்ந்தான்:
'உன் ஆள்காட்டி விரல்..!'

**பொன் முட்டையிடும் வாத்தின்**
**வயிற்றையே கீறிப் பார்த்த**
**பரம்பரையல்லவா உன் பரம்பரை..!**

**எல்லையற்ற திருப்தியே திருப்தியின் எல்லை**

## இறைவாக்கினர்....(3ம் பக்கத் தொடர்ச்சி)

**2. சமூக நீதிக்காகப் போராடியவர்கள்**

இறைவாக்கினர்கள் சிலர் வாழ்ந்த காலத்தில் இஸ்ரயேல் திருத்தலங்களைத் தரிசிப்பது போதுமானது என்று கருதினர். உண்மை கிறிஸ்தவ வாழ்வு என்பது உள்ளத் தூய்மையுடன் கடவுள் அன்பும் பிறரன்பும் நிறைந்த வாழ்வு. பாலஸ்தீன் நாட்டில் பொருளாதார மாற்றம் காணப்பட்டது. ஏழைகள், செல்வந்தர்கள் என்ற பாகுபாடும், நகர்ப்புற, கிராமப்புறம் என்ற வேறுபாடும் தோன்றின. கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அரசியல் சூழ்நிலையால் பாலஸ்தீன் நாடு செல்வச் செழிப்புற்றது. நில உரிமையாளர்களான செல்வந்தர்கள் தங்கள் நிலத்தை கிராமபுற மக்களுக்கு குத்தகைக்கு விட்டு விட்டு நகர்ப்புறத்தில் குடியேறினர். ஆண்டு தோறும் கிராமத்திற்குச் சென்று குத்தகையாக பெரும் பணத்தைப் பிடுங்கிக் கொண்டனர். நகர்ப்புறத்தில் மாளிகை கட்டி சுகபோக வாழ்வில் ஈடுபட்டனர். கிராமப்புற குடியானவர்கள் வறுமையில் வாடினர். செல்வந்தர் ஏழைகளிடம் பணம் பறிக்க பல்வேறு அநீதச் செயல்களில் ஈடுபட்டனர். ஆமோஸ் இறைவாக்கினர் இதை வன்மையாகக் கண்டித்தார். ஆகவே தான் ஆமோஸ் இறைவாக்கினர் "சமூக நீதியின் இறைவாக்கினர்" என்று போற்றபபடுகின்றார். "ஏழைகளை ஒடுக்கி வறியோரை நசுக்குகின்றீர்கள்" என்று செல்வந்தரை சாடினார் *(ஆமோ 4:2).* "நங்கள் ஏழைகளை நசுக்கி, அவர்களி டம் தானிய வரியாக வாங்கியதைக் கொண்டு நன்கு செதுக்கிய கற்களால் வீடு கட்டினீர்கள். உங்கள் குற்றங்கள் எவ்வளவு மிகுதியானவை. உங்கள் பாவங்கள் எத்துணை கொடியவை. நல்லாரைத் துன்புறுத்துகின்றீர்கள். கையூட்டு வாங்குகின்றீர்கள். நகர் வாயிலில் வறியோருக்கு நீதி வழங்க மறுக்கின்றீர்கள்" *(ஆமோ 5:11-12).* இது போன்றே ஏழைகளை வஞ்சிக்கும் பணக்காரர்களை எசாயா இறைவாக்கினர் வன்மையாகக் கண்டித்தார் (காண்.எசா1:21-23). மாறாக, "நன்மை செய்ய கற்றுக் கொள்ளுங்கள்! நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கபபட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம்பெண்ணுக்காக வழக்காடுங்கள்" என்று எசாயா அறிவுறுத்தினார் *(எசா 1:17).* "தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள்; நகர் வாயிலில் நீதியை நிலைநாட்டுங்கள். நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக" என்றார் ஆமோஸ் *(ஆமோ 5:15,24).*

ஆமோஸ் போன்று இன்றைய இலங்கை இளைஞர்களும் சமூக நீதியை நிலைநாட்ட அழைக்கப்பட்டவர்கள். அநீதி, இலஞ்சம், ஊழல், சாதிவெறி, பெண்ணை இழிவாகக் கருதுதல் போன்ற சமூக நோய்கள் நம் நாட்டைத் தாக்கியுள்ளன. இலஞ்சம் நிறைந்த நாடு இந்தியா என்று உலகக் கணிப்பொன்று கூறுகிறது. இந்தியாவின் மக்களவை உறுப்பினர்களில் 25 சதவீதம் குற்றவாளிகள் என அமெரிக்க நிறுவனம் ஒன்று கூறுகிறது. ஊழலற்ற, நீதி, நேர்மை நிறைந்த ஒரு சமுதாயத்தை, இறையரசு வலியுறுத்தும் விழுமியங்கள் நிலவும் சமுதாயத்தை உருவாக்குவது இன்றைய இளைஞர் கடமை. ஒவ்வொரு இளைஞரும் ஆமோசைப் போன்ற சமூக நீதியின் இறைவாக்கினராகச் செயல்பட வேண்டும்.

**3. உண்மை வழிபாட்டைப் போதித்தனர் இறைவாக்கினர்**

இறைவாக்கினர் காலத்தில் யூத மக்கள் கடவுளுக்குப் பலி செலுத்துவதில் பெரிதும் ஆர்வம் காட்டினர். உதட்டளவில் கடவுளின் பெயரை அவர்கள் உச்சரித்தாலும் அவர்கள் உள்ளமோ கடவுளிடமிருந்து வெகு தொலைவில் இருந்தது. பலி செலுத்துவதும் திருத்தலங்களுக்கும் பின்னர் எருசலேம் கோயிலுக்கும் செல்வதே தங்களுக்கு மீட்பளிக்கும் என்று நம்பினர். எத்தனை அநீதச் செயல்கள், பாவச் செயல்கள் புரிந்தாலும் பலியும் வழிபாடும் தங்களைக் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கும் என நம்பினர். ஆகவேதான் கோவிலே மீட்பு என்று எண்ணி ஏமாந்து போகாதீர்கள் என்று எரேமியா அறிவுறுத்தினார் *(எரே 7:4).* மாறாக நேர்மையான, குற்றமற்ற வாழ்வே நம்மைக் கடவுளுக்கு ஏற்புடையவராக்கும். அதுவே உண்மை வழிபாடு என்று இறைவாக்கினர் வலியுறுத்தினர்.

இன்றைய நம் நாட்டு நிலையும் இதுவே. எம் மதத்தினராயினும் உண்டியல் காணிக்கைச் செலுத்துவதும் திருத்தலங்களைத் தரிசிபபதும் போதுமானது என்று எண்ணுகின்றனர். உண்மை கிறிஸ்தவ வாழ்வு என்பது உள்ளத் தூய்மையுடன் கடவுள் அன்பும் பிறரன்பும் நிறைந்த வாழ்வு என்பதை அனைவரும் உணர வேண்டும். இதுவே இன்றைய இளைஞர்களுக்கு இறைவாக்கினர் காட்டும் வாழ்வு நெறியாகும்.

## யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் தினப் போட்டிகள் - 2011

மேற்படிப் போட்டிகள் பங்கு மட்டத்தில் எழுத்துப் பரீட்சையாக இடம்பெறவுள்ளன. தரம் 06 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாக இடம்பெறும். இப் போட்டிக்குத் தம்மை ஆயத்தப்படுத்த விரும்பும் மாணவர்கள் புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகள், வினா விடைகள், செய்திகள், ஆக்கங்களைப் படித்துத் தயாராகுங்கள் எனவும், வளர்ந்தோருக்கான பட்டிமன்றம், வில்லுப்பாட்டுப் போட்டிகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக செயலாளர் பாதுகாவலன் பத்திரிகை வாயிலாக உங்களுக்கு அறிவிக்கின்றார்.

# சிறுபான்மையினர், பெரும்பான்மையினருக்கு அச்சுறுத்தல் என்ற எண்ணக்கருவிலிருந்து நாம் விடுபட வேண்டும்

**-கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை-**

நாம் சிங்களவர்கள் என்ற ரீதியில் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு அச்சுறுத்தல் என்ற எண்ணக்கருவிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்று வணக்கத்துக்குரிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.


சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் அச்சமடையாமல் அவற்றை உண்மையில் ஆராய்ந்து பார்த்து சரியானதையும் தவறானதையும் தேடிப்பார்த்து செயற்படும் புத்திசாலித்தனத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அனைத்து விடயங்களையும் நிராகரிக்க முற்பட்டால் சிறிய நாடான நாம் உலகில் தனிமைபடுத்தப்படும் நிலைமை வரும் என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மடுத்தேவாலய திருவிழா திருப்பலியில் ஆற்றிய மறையுரையிலேயே ஆண்டகை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வணக்கத்திற்குரிய பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அங்கு மேலும் கூறியதாவது. அன்னை மரியாளின் விசேட சந்தர்ப்பத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு வருடமும் இந்த மண்ணில் ஒன்று கூடியிருக்கின்றோம். கத்தோலிக்கராகிய நாங்கள் அன்னை மரியாள் மீது வைத்துள்ள அளவுக்கதிகமான அன்பு, பக்தி ஆகியவற்றின் காரணமாக நாம் இவ்வாறு ஒன்று கூடுகின்றோம். உலகில் பல நாடுகளில் பரந்துள்ள மக்கள் தேவ மரியாளுக்காக அமைத்துள்ள தேவாலயங்கள், வழிபாட்டுத் தலங்கள் என்பவை கணக்கிட முடியாத அளவு காணப்படுகின்றன. இவ்வாறான இடங்களிற்கு மக்கள் மிகவும் பயபக்தியுடன் ஒன்றுகூடுகின்றார்கள் என்பது எமக்கு தெரிந்த விடயமாகும். இலங்கையர்கள் மத்தியிலும் தேவமரியாளுக்காக அன்பு செலுத்தும் தன்மை மிகவும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

### மடு தேவாலயத்தில் ஒன்று கூடியுள்ளோம்

இலங்கையில் அதிகளவில் அன்னை மரியாளுக்காகவே தேவ ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எமது வரலாற்றில் வடக்கு மற்றும் தெற்கு ஆகியவற்றை இணைக்கும் வகையில் சிங்கள, தமிழ், கத்தோலிக்க மக்கள் மட்டுமின்றி ஏனைய மதங்களை பின்பற்றும் மக்களும் இந்த மடு தேவஸ்தானத்தை நோக்கி ஒன்று திரண்டுள்ளனர். மடுத்தேவாலயம் தொடர்பில் அனைத்து இலங்கையர் மத்தியிலும் சிறந்த கௌரவம் காணப்படுகின்றது. இன்று எமது பிரார்த்தனைகளையும், வேண்டுதல்களையும் முன்வைப்பதற்கான வரலாற்று ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த மடுத்தேவாலயத்திற்கு நாங்கள் அனைவரும் வந்துள்ளோம். அந்த வகையில் நாம் அன்னை மரியாள் மீது இந்தளவு அன்பும் பக்தியும் வெளிக் காட்டுவதற்கான காரணம் என்னவென்று நான் கேட்க விரும்புகின்றேன்.



கத்தோலிக்கர்கள் என்ற வகையில் நமது விடுதலையாளர் இயேசுக்கிறிஸ்துவே என்பது எம் அனைவருக்கும் தெரியும். கிறிஸ்துவின் ஆரம்பம் முதல் இறுதிவரை அவரின் மிக அருகில் இருந்தவர் தேவ மரியாள். இயேசுக்கிறிஸ்துவுக்கும் எமக்கும் இடையில் உள்ள மிகவும் பலம் வாய்ந்த மத்தியஸ்த்தர் அன்னை மரியாள் தான். அதனால் தான் மரியாளுக்கு விஷேஷமான இடம் ஒன்று கிடைக்கின்றது. மரியாளின் இந்த செயற்பாடுகள் தொடர்பில் நாம் மேலும் ஆராய்ந்து பார்க்கலாம். அன்று கிறிஸ்து தனது முதலாவது புதுமையைச் செய்த போது அன்னை மரி யாள் மிக அருகில இருந்தார்.

### எம்மில் இல்லாதவை

உங்கள் அயலவர்களை நேசியுங்கள் என்று இயேசுக்கிறிஸ்து கூறுகின்றார். உங்களுக்கு இடையூறு செய்கின்றவர்களுக்காக பிரார்த்தியுங்கள். என்று கிறிஸ்து கூறுகின்றார். உங்கள் மீது அன்பு செலுத்துகின்றவர்கள் மீது மட்டும் நீங்கள் அன்பு செலுத்தினால் ஏற்படும் விளைவு என்ன? உங்கள் சகோதரர்களை மட்டும் நீங்கள் மதித்தால் அதில் உள்ள விசேடம் என்ன? இது தொடர்பில் இயேசுக்கிறிஸ்து எமக்குக் கற்பித்துள்ளார். இது தான் எம்மில் இல்லாத நாங்கள் சிரமப்படுகின்ற ஆனால் கிறிஸ்துவிடம் காணப்படுகின்ற விடயமாகும். இது தான் எமது சமயத்தில் இருக்க வேண்டிய முக்கிய கோட்பாடாகும். அனைத்துத் தர்மங்களிலும் இவ்வாறான கோட்பாடுகள் காணப்படுகின்றன.

எம் அனைவருக்கும் வாழ்வதே இன்று காணப்படுகின்ற பாரிய சவாலாகவுள்ளது. அதாவது பொறாமை, குரோதம், வைராக்கியம் ஆகியவற்றில் இருந்து விடுபட்டு வாழ்வதாகும். இந்தக் கோட்பாடு எமது மனதில் விழாவிடின் நாம் சுயநலவாதிகளாகவும் சுத்தமற்ற வட்டில் சிறைபபடும் நிலைமைகளுக்கும் மாறி விடுவோம். நாம் எமது உணர்வுகளுக்கு அடிப்படையாகி விடுவோம்.

### பிரச்சினைகளில் சிக்கியுள்ளீர்களா?

அந்த வகையில் எமது இலங்கையின் தர்மத்தின் நீடிப்பு மிகவும் தேவையான காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. எமது மனது குணமடைந்தால் உடலும் குணமடைந்து விடும். நோய்வாய்ப்பட்டு மருத்துவரிடம் நான் சென்றால அவர் பரிசோதனைகளைச் செய்து விட்டு என்ன நோய் என அடையாளம் காண முடியாவிடின் ஏதாவது பிரச்சனைகளில் சிக்கியுள்ளீர்களா? என்று கேட்பதுண்டு. காரணம் மனது குணமடையும் அளவுக்கு உடலும் குணமடைகின்றது. ஆரோக்கியமான மனதிற்கு ஆரோக்கியமான உடல் காணப்படுவதாக பழை கதை ஒன்று உள்ளது. ஆரோக்கியமான ஆன்மீகத்துவம் இன்றி சிறந்த சரீர ஆரோக்கியம் பற்றி சிந்திக்க முடியாது. எனவே எமது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட மனது குணமடைய வேண்டும். தேசிய ரீதியிலும் மனது ஆரோக்கியமாக இருக்க வேண்டும்

### சுயநலத்திற்கு எதிரான யுத்தம்

இன்று நாம் பிரிவடைந்த கட்டமைப்புக்குள் இருந்தே பேசிக் கொண்டிருக்கின்றோம். இன, மத, மொழி, குலம் போன்ற பிரிவினையான அபாயகரமான கட்டமைப்புக்குள் மற்றும் அபாயகரமான சிறைகளில் சிறைப்பட்ட நிலையிலேயே இருக்கின்றோம். எமது நாட்டிற்கு வரலாற்று ரீதியான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ள காலம் இதுவாகும். உண்மையான சமாதானம் மற்றும் அர்த்தமுள்ள ஒற்றுமையை உருவாக்குவதால் இன, மத, மொழி, குலம் என்ற வகையில் பிரிந்து நிற்காமல் ஏனையவர்களுடன் சக வாழ்வுடன் கைகோர்த்தல் என்பனவற்றுக்கான காலம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு செயற்படுவதற்கு பாரிய பொதுநலம் மற்றும் இரக்க குணமுடைய மனம் இருக்க வேண்டும். கத்தி, வாள், துப்பாக்கி, குண்டுகளினாலான யுத்தம் முடிந்துவிட்டது. எனினும் தற்போது சுயநலத்துக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பிக்க

**உரையின் தமிழாக்கம்**

வேண்டியுள்ளது. அந்த யுத்தமானது முடிக்கப்பட்டுள்ள யுத்தத்தை விட கடினமானது. நாம் வெற்றி கொள்ள முடியாத எதிரிகள் நமக்குள் இருக்கின்ற சுயநலம், வைராக்கியம், குரோதம், பொய் ஆகியனவையாகும்.

கலாசாரம், மொழி, மதம் என்பன ஒவ்வொருவரும் ஒற்றுமையாவதற்கு இருக்கின்ற இணைப்புகளாகும். எனினும் இன்றைய நிலைமையில் அவை எம் மத்தியில் பிரிவை ஏற்படுத்த காரணமாகியுள்ளன. தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான விடயங்கள் கட்டுடைந்து போயுள்ளன. மதம் என்பது தர்ம ரீதியாக வாழ்வதற்கு காணப்படுகின்ற ஆதாரமாகும். எனினும் அதனையும் பிரிவினைகளுக்கும் ஒவ்வொருவர் மத்தியில் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதற்கும் காரணமாகக் கொண்டுள்ளனர். தமது இனம் மற்றும் மதம் தொடர்பில் இனவாதமாக சிந்திப்பது எந்த வகையிலும் மத ரீதியான விடயமல்ல.

### ஒற்றுமையின் முக்கியத்துவம்

பிரிந்து செயற்படுதல், சந்தேகக் கண்கொண்டு பார்த்தல் என்பன எந்தவொரு மதத்திலும் அனுமதியளிக்கப்படாதவையாகும். அவ்வாறு செய்கின்ற ஒருவருக்கு எந்த விதமான தர்ம உள்ளடக்கமும் இல்லை. அதன் மூலம் சமூக ஆரோக்கியத்தை எதிர் பார்க்க முடியாது. எனவே ஒவ்வொரு சமயமும் மற்றும் எமது சமயமும் ஒற்றுமை, அன்பு, கருணை, ஆகியவற்றை வெளிக்காட்டபடும் விடயமாக உருவாக்கிக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் எமக்கு இடையில் காணப்படும் வேற்றுமைகளை எமக்கு இடையிலான ஒற்றுமையை ஏற்படுத்தும் திரவமாக உருவாக்க வேண்டும். அவற்றை எம் ஒவ்வொருவருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சாதனமாக பயன்படுத்த வேண்டும.

புள்ளி விபரங்களுக்காக நாம் சமயத்தக்கு உரித்தாகவில்லை. வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் தர்மத்தையும் வாழ்க்கையில் உள்ளடக்குமாறு எமது குருமார் எமக்கு உபதேசித்துள்ளனர். அதுதான் சமயம் என்பதாகும்.

சமயத்தை பின்பற்றும் ஒருவரால் மற்றுமொருவரை எதிர்க்கவோ மற்றுமொருவரை குறைத்து மதிப்பிடவோ முடியாது. பொதுநலம் தர்மம், சமய பற்று, என்பவை முதன்மை பெறும் ஏனையவர்களை மதிக்கின்ற ஆன்மீக சுகம் எமது இலங்கைக்கு தற்போது தேவைப்பட்டுள்ளது. இலங்கையர்கள் என்ற ரீதியில் சகோதரத்துவத்துடனும் கருணையுடனும் வாழும் கலாசாரம் ஒன்றை நாம் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. எமது நடத்தைகள் நாம் பின்பற்றும் சமயத்துக்கு முரணாக இருக்கும் பட்சத்தில் நாம் ஒருவரை ஒருவர் மதிக்காமல் இருந்தால் தெரிந்தோ தெரியாமலோ எமது சமய ஆசான்களை புறக்கணிக்கின்றோம். அது எம்மையே நாம் அவமானப்படுத்துவதற்கு சமனாகும். அது வைராக்கியம் மற்றும் பிரிவினை உருவாக்கும் செயற்பாடாகும்.

### அனைவரும் வெற்றி என்ற எண்ணக்கரு

எனவே, எமது நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் வெற்றி மற்றும் தோல்வி குறித்து சிந்திப்பதைவிடுத்து அதற்குள் இடம் பெறாத ஏனைய இனம் மற்றும் மொழிகளை வெறுக்காமல் பிரிவினையை மேலும் ஊக்குவிக்கும் வெற்றியின் அல்லது தோல்வியின் மனநிலையை விருத்தி செய்வதை விடுத்து நான் வெற்றி நீ தோல்வி என்று சிந்தித்துக் கொண்டிருக்காமல் நாம் அனைவரும் வெற்றி என்ற எண்ணக்கருவை விருத்தி செய்வது முக்கியத்துவமிக்கதாகும். இலங்கையர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் இதனை தெரிவு செய்துகொள்ள வேண்டும்.

அவ்வாறான அன்பு கருணை ஆகியவற்றில் நிறைந்த நாட்டை நாம் கட்டியெழுப்புவதற்கு காணப்படுகின்ற தடைகளை நீக்க வேண்டியுள்ளது. அவ்வாறான நோக்கத்தை முன்னோக்கிக் கொண்டதாகவே அரசியல் தலைவர்கள் செயற்படவேண்டும். தமது செயற்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையை பேண வேண்டும். விமர்சனத்துக்கு நியாயமாக இடமளித்து நியாயமான விமர்சனங்களை ஏற்று விட்டுக் கொடுப்புடன் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் செயற்பட வேண்டிய சட்டதிட்டங்களை எமது நாட்டில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும

### பன்முகத்தன்மையை ஏற்க வேண்டும்

அதுமட்டுமன்றி சகோதரத்துவத்துடன் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். பன்முகத்தன்மை பெரும்பாலும் எம்மை போஷிக்கும். எனவே, பன்முகத்தன்மையின் முன் நாம் மகிழ்ச்சியடையவும் விருப்பமடைய நாம் பின்னிற்கவும் வேண்டியதில்லை. இந்த இடத்தில் நாம் சிங்களவர்கள் என்ற ரீதியில் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் சிந்திகக வேண்டும். சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு அச்சுறுத்தல் என்ற எண்ணக் கருவலிருந்து நாம் விடுபட வேண்டும். இளம் சகோதரர் மூத்த சகோதரரை தமது பக்கம் இழுத்துக்கொள்வதற்கு விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும். எதிரிகளை பழிவாங்கும் எண்ணத்திலிருந்து விடுபட்டு தவறு செய்தாலும் மன்னிப்பு வழங்கியதை வரலாற்று சிரேஷ்டத்துவமிக்கவர்களின் கதா பாத்திரங்கள் எமக்கு கூறுகின்றன.

### உலகம் ஒரு கிராமம்

அத்துடன் சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் அச்சமடையாமல் அவற்றை உண்மையில் ஆராய்ந்து பார்த்து சரியானதையும் தவறானதையும தேடிப்பார்க்கும் புத்திசாலித்தனத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அனைத்து விடயங்களையும் நிராகரிக்க முற்பட்டால் சிறிய நாடான நாம் உலகில் தனிமைபபடுத்தப்படும் நிலைமை வரும். இலங்கை ஒரு தீவாகும். எனவே எம்முள் தீவு சார்ந்த எண்ணக்கரு இருக்கலாம். எனினும் இன்றைய மக்கள் தொடர்பாடல் முன்னேற்றத்துடன் உலகமயமாக்கலுடன் முழு உலகமும் ஒரு கிராமமாக மாறியுள்ளது.

நாம் உண்மைக்கு முகம் கொடுக்க பயப்படவேண்டியதில்லை. அதேபோன்று எமக்கு இடையில் காணப்படும் கருத்து முரண்பாடுகளை தீர்ப்பதை விடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கு வெளி உதவிகளை நாடுவதும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

குடும்பம் ஒரு கதம்பம்



# மண வாழ்வு மலர

- எஸ். பிலிப்

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பெருகப் பெருக, வாழ்வியல் சிக்கல்களும் வளர்ந்துகொண்டு வருவதைக் கண் கூடாகப் பார்க்கிறோம். மணவாழ்வுச் சிக்கல் அவற்றுள் ஒன்று. விவாகரத்து எனப்படும் மணமுறிவு மேலைநாடுகளைப் போல நம் நாட்டிலும் பெருகி வருகின்றது. முன்பெல்லாம் திரைப்படக் கலைஞர்கள், பேரும் புகழும் பெற்றவர்கள் பற்றிய மணமுறிவுச் செய்திகளை அடிக்கடி கேள்விப்படுவோம். இப்போதோ நடுத் தர மற்றும் அடித்தட்டு மக்களிடையே கூட மணமுறிவு நிகழ்வு களைக் காண்கிறோம்.

என்ன காரணம் என்று ஆய்வு செய்தால், பல காரணி களை உணரலாம். அவற்றுள் தலையானது வளர்ந்து வரும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு. முன்பெல்லாம் பொரு ளாதார மற்றும் சமூகக் காரணிகளை முன்னிட்டுப் பெண்கள் தம் கணவர்களின் வன்முறை ஆதிக்கத்தைச் சகித்துக் கொண்டு வந்தனர். பெண்ணியப் பார்வையும், மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வும் கல்வி மற்றும் ஊடகங்கள் வழியாகப் பரவி. பல பெண்கள் பிரிந்து வாழத் துணிகின்றனர். கணவர்கள் தம் மனநிலையை மாற்றிக்கொள்ள வேண்டிய காலத்தின் கட்டாயத் தில் இருக்கிறார்கள்.

மணமுறிவுகள் ஏற்படுத்தும் தனிமனித மற்றும் சமூகக் காயங்கள் பற்றிக் கவலைப்படுவோர் எல்லா நாடுகளிலும் உள்ளனர். இந்நிலையை மாற்றத் தம்மாலான முயற்சிகளை இவர்கள் மேற்கொள்ள முன்வருகின்றனர். அப்படிப்பட்ட ஒருவர் தான் அமெரிக்காவின் நீல் கிளார்க் வாரன் என்னும் உள வியல் மருத்துவர். இவருக்கு மூன்று பெண்பிள்ளைகள். அமெரிக் கத் திருமணங்களில் ஐம்பது விகிதம், அதாவது பாதிக்கு பாதி மணமுறிவுகளில் முடிகின்றன என்னும் புள்ளி விவரம் வாரானின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்க வேண்டும். தனது பிள்ளைகளுக்கு அப்படிப்பட்ட நிலை நேரக்கூடாது என்று சிந்தித்தார் தந்தை வாரன்.

தனது நாற்பது ஆண்டு உளவியல் மருத்துவம் மற்றும் தம்பதியருக்கான வழிகாட்டல் அனுபவத்திலிருந்து ஆய்வு ஒன்றினை மேற்கொண்டார் வாரன். மணமுறிவு பெற்ற 500 தம்பதியரையும், அவர்களின் பிள்ளைகளையும், அவர்களின் பெற்றோரையும் கூட நேர்காணல் செய்தார். வாரனுக்கு பெரும் வியப்பை அளித்த தகவல், இந்த 500 திருமணங்களில் 70% தம்பதிகள் தங்கள் திருமண வாழ்வின் தொடக்கத்திலேயே மணவாழ்வுச் சிக்கல்களைச் சந்திக்கத் தொடங்கினர் என்பது தான். அதாவது, தவறான மனப்பொருத்தம்தான் அவர்களின் மணவாழ்வைத் தோற்கடித்தது. இப்படிப்பட்ட மணமக்கள் திரு மணமே செய்திருக்கக் கூடாது. பொருத்தமான வேறு இணை களைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் வாரன்.

**மனப்பொருத்தம்**

இந்த மனப்பொருத்தத்தைக் கண்டறிவது எப்படி? இதற்காக 5000 மணமானவர்களிடம் ஒரு கேள்வித்தாளைக் கொடுத்து விடையளிக்கச் சொன்னார். இந்த ஐந்தாயிரம் பேர் களிலிருந்து மிக மகிழ்வான 200 தம்பதியரையும், மிகச்சோர் வான 200 தம்பதியரையும் பிரித்தெடுத்து, இவர்களை, வேறு படுத்தும் 29 கூறுகளைக் கண்டறிந்தார் வாரன். இந்த 29 தளங் களிலும் ஒத்துப்போகின்ற தம்பதியர் மகிழ்ச்சியான மணவாழ்வு கொண்டிருப்பர் என்பது அவரின் இந்த ஆய்வின் முடிவு.

இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்ட 2000-ஆம் ஆண்டில் 'ஈ-ஹார்மனி' என்னும் இணையதளத்தைத் தொடங் கினார். இத்தளம் திருமணம் செய்வதற்குப் பொருத்தமான 'இதயங்களை'த் தேர்ந்தெடுத்துக் கொடுத்தது. அதில் பதிவு செய்ததன் மூலம் இணைந்தவர்கள் திருமணம் செய்யத் தொடங் கினர். இன்றுவரை ஓர் இலட்சம் திருமணங்கள் இந்த இணைய தளம் வழியாக நடந்திருக்கின்றன என்பது ஒரு சாதனை.

**மணவாழ்வின் வெற்றிக்கு**

வாரனின் அடிப்படை வரைவு இதுதான். திருமணம் செய்து கொள்ளப் போகும் இணைகள் 29 தளங்களில் - அறிவாற்றல், தோற்றம், நகைச்சுவை, உணர்வுகளைக் கையாளுதல், வாழ்க்கை மதிப்பீடுகள், ஆன்மீக ஈடுபாடு, பொருளாதாரம் போன்றவற்றில் ஒத்த கருத்துடையவர்களாய் இருக்க வேண்டும். அப்படி இருந் தால், அவர்களின் திருமணம் வெற்றிகரமாக அமையும். மிக அதிக வேறுபாடுகள் இருந்தால், தொடக்கமே தோல்விதான் என்பது அவரது ஆய்வின் ஒரு கண்டுபிடிப்பு.

ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களை உடைய தம்பதியர் மகிழ்வாக வாழ முடியாது என்று அடித்துச் சொல் கிறார் வாரன். எதிர் துருவங்கள் ஈர்க்கும் என்று பொதுவாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். **(தொடர்ச்சி 7ம் பக்கம்)**

# பரிந்து பேசும் அம்மா

கவிதைச் சரம்

கதிரைச் செல்வியே
கருணை நிறைந்த அம்மா
கதி கலங்கி நிற்கின்றோம் அம்மா
கவலைகளால் நிறைந்துள்ளோம் அம்மா
கடலலையென கொந்தளிக்கின்றோம் அம்மா
கரும்பாக வந்து எமை காப்பீர் அம்மா
கல்லான இதயங்களை கனிவாக்கும் அம்மா
கண்ணீரால் நிறைந்த விழிகளை துடைத்தருளும் அம்மா
கல்வி கற்கும் எம்மவரை காத்தருளும் அம்மா
கரமதில் ஏந்திய மகனிடம் பரிந்து பேசும் அம்மா

அ. நிருசன்
சில்லாலை

# சிரிப்பே சிவியம்


நாடுகள் எப்படியும் போகட்டும்
நமக்கு ஏதும் கிடைத்தால் போதும்
களவு எடுத்தால் என்ன?
காரியம் நிறைவேறினால் போதும்
மாற்றான் விழுந்து கிடந்து
மரணம் ஆனால் என்ன?
மனைவி கிடைத்தால் போதும்
ஏதுமற்ற ஏதிலியானாலென்ன
என்பங்கைத்தந்தால் போதும்
கும்பிட்டு நின்று
குருதித் தானம் கேட்டால் என்ன?
குறுக்கு வழி இருந்தால் போதும்

புயல் அடித்து மாற்றான்
புழுதி படிந்தால் என்ன?
புகழ் வந்து சேர்ந்தால் போதும்
பாதை தெரியாமல்
பாட்டி கதைகேட்டால் என்ன?
பாதுகாப்பே எனக்கு இருந்தால் போதும்
சிந்தித்து செயற்படா சில மனிதர்களின்
ஓவியத்தை பார்க்கும் போது
சிரிப்பே சிவீயமாகிறது.

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு.

# குருத்துவத்தில் 60 வது ஆண்டு விழா

## அருட்தந்தை அந்தோனி பிரான்சிஸ் குலாஸ்



அருட்தந்தை அந்தோனி பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி. அவர்கள் அன்று (17-08-2011) புதன்கிழமை தமது குருத்து வத்தின் அறுபதாம் ஆண்டு நிறைவு நன்றி திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். இவர் நல்லூர், கோப்பாய், உரும்பிராய், சுன்னாகம், அச்சுவேலி, உடுவில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தாளையடி, மானிப்பாய், நெடுந்தீவு, பாண்டியன் தாழ்வு, ஊர்காவற்றுறை, சில்லாலை, பாஷையூர், நாவாந்துறை, அனுராதபுரம், நீர்கொழும்பு போன்ற பணித்தளங்களில் பணியாற்றியுள்ளார். மன்னார், வங்காலை பங்கின் முதற்குரு ஆவார். தம்பணி வாழ்வின் நிறைவினை கொழும்புத்துறை அமல உற்பவ குருக்கள் இல்லத்தில் கொண் டாடுகின்றார்.

**உடல் , உள ஆன்மீக பலத்துடன் இவரது பணி மேலும் சிறக்க பாதுகாவலன் குடும்பத்தின் வாழ்த்துக்கள்.**


## வெளிவந்து விட்டது



**உறவின் இராகங்கள் III (இறுவட்டு)**
உறவின் இராகங்கள் I, II.. என்ற இறுவட்டுப் பாடற்தொகுப்பின் தொடர்ச்சி யாக உறவின் இராகங்கள் III வெளி வந்து ள்ளது.

**உறவின் இராகங்கள் (பாடற் புத்தகம்)**
உறவின் இராகங்கள் என்ற பாடற் புத்தகத்திற இரண்டாம் பதிப்புத் திருத் தங்களுடன் வெளி வந்துள்ளது.
இவற்றை நீங்கள் யாழ். திருவழிபாட்டு நடுவகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என திருவழிபாட்டு ஆணைக்குழு இயக்குநர், அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா அடிகள் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.


## வளரும் வன்.... (3ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாததால் மாணவரிடையே வன்மனநிலை வளர்கிறது என் கின்றனர். மன நல வல்லுநர்கள.

**9. பள்ளி தரும் மன அழுத்தம்:** தற்கால பள்ளிகள் மாணவர்களி டையே போட்டி உணர்வை வளர்க்கின்றன. 100% வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத் தில் மாணவருக்கு மன அழுத் தம் தருகின்றன. இதுவும் அவர் களது வன் மனநிலையை வளர்க கின்றது.

**10. உடல் உழைப்பின்மை:** வீட்டிலும் சரி, பள்ளியிலும் சரி, இன்றைய மாணவர்களுக்கு உடல் உழைப்பு என்பதே இல்லாமல் போயவிட்டது. பள்ளிக்கு நடந்தோ, சைக்கிளிலோ சென்றவர்கள் இன்று காரிலும், பேரூநதிலும் பயணம் செய்கிறார்கள், விளையாட்டு, உடற பயிற்சி முதலியன குறைந்து விட்டன. இவையும் மாணவரின் வன் மனநிலையின் காரணங்க்ள்.

மேற்கணட குறைகளை யெலலாம் களைய பெற்றோரும, ஆசிரியரும், பளளி நிர்வாகிகளும் முன் வரவேண்டும். அத்துடன், மாணவருக்குத் தேவையான உள வியல் உதவிகளைப் பள்ளியிலும், வெளியிலும் வழங்க வேண்டும். டெல்லி போன்ற மாநகரங்களில் மாணவர்களையே உளவியல் ஆற்றுனர்களாகப் பயிற்றுவித்து, அவர்களைக் கொண்டே பாதிக்கப்பட்ட மாண வர்களுக்கு உதவி செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள் ளனர். மாணவர்கள் கோபத்தை நெறிப்படுத்துதல், முடிவெடுத் தல், மன அழுத்தம் கையாள் தல், தோழர்களின் தொந்தரவு களைச் சந்தித்தல் போன்ற கருத்துகளில் பயிற்சி பெறுகின றனர். நாமும் இது போன்ற சிறபபு வழிகளில் கவனம் செலுத தினால்தான் வளரும் தலை முறையினர் வளம் பெறமுடியும்.

# தலைநகரின் தமிழ் குருக்கள் வசதியுடன் தங்க யாழ் மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில் ஒரு புதிய இடம்

யாழ். மறைமாவட்டத் திற்குச் சொந்தமான கட்டிடத் தொகுதி அடங்கிய காணி யொன்று கொழும்பு, பொறலை யில் உள்ள சுவிஸ் நாட்டு தூதர கத்திற்கருகாமையில் உள்ளது. அனைவரும் அறிந்த விடயம். இந்த வளாகம் கத்தோலிக்க திருச்சபையின் சிறந்த பரோப காரிகளுள் ஒருவராகிய அச்சு வேலியைச் சேர்ந்த சிறிசித்தம் பலம் கார்டினர் அவர்களால் யாழ். மறை மாவட்டத்திற்கு அன்பளிப்பாக எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை யாழ் ஆயராக இருந்த போது வழங்கப்பட்டது.

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மாணவிகள் கொழும்பில் தங்கியிருந்து கல்விகற்க வேண்டிய சூழ் நிலையில் அவர்களுக்குத் தங்குமிட வசதி கொழும்பில் தேவைப்பட்டது. இத்தேவையை நிறைவு செய்ய ஒரு விடு தியை இந்த வளாகத்தில் நடாத்துவதற்கு திருச்சிலு வைக் கன்னியர் முன்வரவே அவர்கள் 1961ஆம் ஆண்டு இப்பணியைத் தொடங்கினர்.

இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக கொழும்பு வரும் அருட்பணி யாளர்கள் தங்குவதற்கான விடுதி வசதியின் தேவை மிக முக்கியமாக உணரப்பட்டது. எனவே இந்த வளாகத்திலுள்ள விடுதி தொடர்ந்து திருச் சிலுவை கன்னியர்கள் பரா மரிப்பில் இயங்க, அருகிலே ஒரு குருக்கள் தங்குவதற்கான ஒரு கட்டிடம் முன்னாள் ஆயர் தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்களால் அமைக்கப்பட்டது. இக் கட்டிடத்தின் பெரும் பகுதி யான செலவை யாழ் மறை மாவட்டம் ஏற்றுக் கொண்டது. மன்னார் மறைமாவட்டத்தையும்,



திருமலை மட்டுநகர் மறை மாவட்டத்தையும் சார்ந்த குருக் களுக்கும் தங்குமிடம் தேவைப் பட்டதால் இவ்விரு மறைமாவட் டங்களிலிருந்தும் சொற்ப பங்களிப்பு பெறப்பட்டது. இவ் வாறு கட்டப்பட்ட கட்டிடம் 1990ம் ஆண்டில் இருந்து பாவ னையில் இருந்து வந்தது.

**S.V.B. மங்களராஜா**

காலப்போக்கில் பெருகி வந்த குருக்களின் எண்ணிக் கைக்கு இக்கட்டிடம் போதா திருந்த காரணத்தினால் புதிய தொரு கட்டிடம் கட்ட யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தமது குருக்களின் ஆலோசனையுடன் தீர்மானித்து 2009ம் ஆண்டில் இருந்து நிர்மாணப் பணிகள் ஆரம்பமாயின. 12 தனியறை கள் கொண்ட இக் கட்டிடத்தின் வரைபடம் அருட்பணி. வேத நாயகம் அ.ம.தி. அவர்களால் வரையப்பட்டது. யாழ் மறை மாவட்ட குருவாகிய அருட்பணி. எிக்றோஷன் அடிகள் இதற்கு அடிக்கல் நாட்டினார். யாழ் மறை மாவட்ட நிதிப் முகாமை யாளர் அருட்பணி. அன்ரனிதாஸ் அடிகளின் மேற்பார்வையில் இக்கட்டிடம் யாழ் மறை மாவட்ட ஆயரின் நிதியத்தைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டு 2011 ஆகஸ்ட் 4ம் தேதியன்று மறை மாவட்டக் குருக்களின் பாது காவலராகிய புனித வியான்னி

மரிய அருளப்பர் திருநாளின் போது காலை 11.30க்கு திருப்பலி யுடன் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை யினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இப் புதிய குருக்கள் தங்குமிடத் திற்கு **Bishop Thomas Block** என்று பெயரிடப்பட்டுள்ளது.




குருக்களின் எண்ணிக்கை கூடி வரும் இந்நாட்களில் இப் புதிய கட்டிடமானது யாழ், மன்னார், திருமலை மட்டுநகர் மறை மாவட்ட அருட்பணியாளர்கள் கொழும்பு வரும் போது வசதி யாகத் தங்கிச் செல்ல பெரும் உதவியாக இருக்கும். ஏற்கனவே இத்தொகுதியில் உள்ள சிற்றா லயம் புது மெருகூட்டப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. தற்போது முன்னர் இருந்த பழைய கட்டி டத்தையும் திருத்தியமைக்க யாழ் ஆயர் யாழ் மறைமாவட்ட நிதிமுகாமையாளர் அன்ரனிதாஸ் அடிகளாரைப் பணித்துள்ளார்.


## திருமண வாழ்வில் 50வது வருட பொன் விழா காணும்



**திரு. திருமதி. பொனிப்பாஸ் மெற்றிலம்மா**

23 - 08 - 2011

கொழும்புத்துறை யாழ்ப்பாணம்

"ஆண்டவரைப் போற்றுங்கள் ஏனெனில் அவர் நமக்குக் காட்டும் மாறாத அன்பு மிகப் பெரிது"

இவர்களை இறைவனின் திருவருள் பெற்று நலமாக வாழ அன்புடன் வாழ்த்தும் அன்புப்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.

## திருமண வெள்ளி விழா வாழ்த்து

22.08.2011

திரு.திருமதி.

வலன்ரைன் யூஜின் தம்பதிகள்



திருமண வாழ்வில் 25வது ஆண்டு நிறைவை கொண்டாடும் எம் பெற்றோரை நீண்ட காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

மனதார வாழ்த்தும்...

பிள்ளைகள்

இல. 8, சென் செபஸ்ரியன் வீதி, யாழ்ப்பாணம்.

## விண்ணக வாழ்வில் 02ம் ஆண்டு நினைவுகளுடன்...



**தோமஸ் ஜேம்ஸ்**

மலர்வு 12-09-1945

உதிர்வு 30-11-2009

"நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம் அவரோடு நிலைத்திருந்தால் அவரோடு ஆட்சி செய்வோம்" (2 திமோ. 2)

நம் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மரியன்னை பேராலயத்திலும். அருள் ஆச்சிரமத்திலும் 30-08-2011 அன்று காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இல. 11, மூளாய் லேன், சுண்டுக்குளி.

உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

Add - 65/11


## மண வாழ்வு ...(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் முதலில் ஒருவிதமான ஈர்ப்பு இருந்தாலும், போகப் போக வெறுப்புத்தான் உண்டா கும். எனவே ஒருமித்த கருத் துடையவர்கள் திருமணம் செய் வது தான் சிறந்தது.

இந்த 29 தளங்களிலும் வாரன் முதன்மைப்படுத்துவது 'உளநலம்' தான். உணர்வு முதிர்ச்சி பெற்ற கணவன் - மனைவியரிடையே பிணக்கு களுக்கான வாய்ப்பு மிகவும் குறைவு. எனவே அறிவு, படிப்பு, வருமானம், தோற்றம் இவற்றை யெல்லாம் விட உளநலம் நிறைந்த வரன்களையே பெற்றோர் தேட வேண்டும்.

திருமணம் செய்பவர் களின் எதிர்பார்ப்பு அடிப்படை யில் தங்களுடைய இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒருவர் தேவை என்பது தான். யாரோடு இருக் கும் போது நாம் மகிழ்ச்சியாக, இயல்பாக, நாமாக இருக் கிறோமோ, அவர்களை நாம் விரும்புகிறோம், அவர்களோடே எப்போதும் இருக்க விரும்பு கிறோம். இது தான் திருமணத் தில் நிகழ்கிறது. எனவே, தம்பதியர் தங்கள் துணை வரை மகிழ்ச்சிப்படுத்துவதை முதன்மையாகக் கருத வேண்டும்.

மணவாழ்வின் வெற் றிக்கு மிக அவசியமான பண்பு என்று வாரன் குறிப்பீடுவது நேர்மையை பொய்யும் மறைத் தலும் எங்கே இருக்கின்றனவோ, அங்கே திருமணம் ஒரு தோல்வி தான்.

மாற்றம் மணவாழ்வின் அடிப்படைத் தேவை. கண வனுக்காக மனைவியும், மனை விக்காகக் கணவனும் தங்களை மாற்றிக் கொள்ளும் போது மண வாழ்வு நிச்சயம் மணம் வீசும்.


## விண்ணக வாழ்வில்....

## 31ம் நாள் நினைவு அஞ்சலி



**திருமதி. அடைக்கலநாயகி பூமணி லூயிஸ்**

219, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

அன்னையின் மடியில் 08-09-1927

விண்ணக வாழ்வில் 29-07-2011

அன்புக்கு அகல் விளக்காய்
பாசத்தின் பதியாய்
எந்நாளும் எம்மை
அன்புடன் அரவணைத்தீர்கள்
முப்பத்தொரு நாள்கள் என்ன
ஏழேழு பிறவியும்
எம்மை விட்டகலா
உங்கள் பசுமையான நினைவு

பிரிவால் துயருறும் மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

Add - 63/11


## பாதுகாவலன் ஆசிரியரின் முகவரி மாற்றம்

நான் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு இடமாற்ற மாகி செல்வதனால் எனது புதிய முகவரி:

ஆசிரியர் – பாதுகாவலன்
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம். என அமையும்.

தொலைபேசி: 021 222 7884

- ஆசிரியர் -

# பாதுகாவலன் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை



பாதுகாவலன் கத்தோலிக்க பத்திரிகை ஆசிரியர் அருட்பணி.எஸ்.ஏ.றொஷான் அடிகள் தலைமையில் யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் "பாதுகாவலன் ஊடகவியலாளர் கருத்தரங்கு" ஒன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், குருமட மாணவர் A.L. பரீட்சை சித்தியடைந்தோர், அரசாங்க உத்தியோகத்தர் உட்பட சுமார் 40 பயனாளிகள் பங்குபற்றினர். முதலாம் அமர்வைப் பொறுப்பேற்று, தமிழகம் திண்டிவனத்தைச் சேர்ந்த அருட்பணி. மரிய டெல்லஸ் அடிகள் நடாத்தினார். இவர் தமிழக விவிலியப் பணிக்குழு செயலாளராகவும், தோழன் பத்திரிகை ஆசிரியராகவும், இன்னும் பல பணிகளிலும் ஈடுபட்டு உழைப்பவர். இவர் தமது உரையில், பத்திரிகையானது, வரலாற்றை சொல்வது, நலம் தருவது, நல்லதைத் தெரியப்படுத்தித் தீமையை விலக்குவது, சமுதாயத்தின் மனக்கண்ணாடி. கலைஞர்களை உருவாக்குவது, கடவுளுடைய கருவியாக மாறுகிறது என்று அதன் பண்புகளை விளக்கினார்.

இரண்டாம் அமர்வை, முன்னாள் பாதுகாவலன் ஆசிரியராகப் பத்து வருடங்கள் பணியாற்றியவரும் ஒன்பது புத்தகங்கள் எழுதி வெளியிட்டவருமான அருட்பணி. றூபன் மரியாம் பிள்ளை அடிகள் நடாத்தினார். செய்தியானது வளமைக்கு மாறான நிகழ்வாயிருக்க வேண்டும். புதியதாக ஆர்வமூட்டுவதாக, மக்களைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். அவசர அவசரமாக நடக்கின்ற ஒரு வரலாறே செய்தியாகும். செய்தியாளருக்கு துல்லியம், பக்கம் சாராமை, நடுநிலமை ஆகிய பண்புகள் வேண்டும். என்ன? எங்கே? எப்போது? எப்படி? ஏன்? எவருக்கு? என்கின்ற ஆறு "எ"க்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். தேடலுடன் பெறுமானமான செய்திகளைக் கொடுக்க வேண்டும். என்று அறிவுறுத்தினார்.

மூன்றாம் அமர்வில் ஆன்மீக எழுத்தாளரான அருட்பணி. றெஜிஸ் இராசநாயகம் அடிகள். "பாதுகாவலன் வழி நற்செய்தி அறிவிப்புப்பணி" என்ற தலைப்பில். மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுலின் "மீள் நற்செய்தி அறிவிப்புப் பணி" என்ற சிந்தனையின் கீழ், கல கலப்பூட்டும் நகைச் சுவையுடன் தம் உரையை விருந்தாக்கினார்." உணமைக்காக உழைக்க வேண்டும். பத்திரிகையாளரின் நான்குவித முக்கிய பணிகளான, அறிவித்தல், அறிவுறுத்தல், கருத்தினை எடுத்துரைத்தல், மகிழ்வித்தல் ஆகியவற்றைச் செயல் படுத்த வேண்டும். "எழுச்சி மிகு எழுத்துக்களால் ஏற்ற மிகு உலகு செய்வோம். கத்தியின் வலிமையால் சாதிக்க முடியாததைப் பேனா முனையால் சாதிப்போம்" என்ற உறுதியுடன், உண்மைத் தன்மையோடு செய்திகளை வழங்கி, பாதுகாவலன அற்புத அறிவுக் களஞ்சியமாகவும், ஆழமான சமூக மாற்றக் கருவியாகவும் ஆக்குவது எமது கரங்களில் தான் உள்ளது எனத் தமது அறிவார்ந்த உரையால் அனைவரையும் கவர்ந்தார்.

யாழ் நகரின் மூத்த குருவும், "தேவதாயின் குரல்" முதலிய சஞ்சிகைகளை எழுதி ஆன்மாக்களை ஆண்டவர் பால இழுப்பதில் ஆர்வமுள்ளவருமான அருட்பணி. ஜெயசீலன் அடிகளாரும், பாதுகாவலன் முன்னாள் ஆசிரியரான அருட்பணி. சாள்ஸ் கொலின் அடிகளாரும் தமது இரத்தினச் சுருக்கமான உரைகளினால் அறிவுறுத்தினார்.

நான்காம் அமர்வை மேற் கொண்ட மன்னானர் மறை மாவட்டத்தைச் சேர்ந்தவரும், மன்னா கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான தமிழ் நேசன் அடிகளார், செய்திகளைப் பெற்றுக் கொள்வதில் தாமதம், மக்களைக் கவரும் விதமாக எழுதாமை, படிக்கும் ஆர்வம் மக்களிடையே அருகி வருவது, நிதிப்பிரச்சினை ஆகிய சவால்களை கத்தோலிக்கப் பத்திரிகைகள் இன்று எதிர்நோக்க வேண்டியுள்ளது என்பதை எடுத்தியம்பினார்.

இறுதியாக பாதுகாவலன் பத்திரிகை அச்சமைவாகும் முறையை ஆசிரியர் அருட்பணி எஸ்.ஏ. றொஷான் அடிகள் அச்சகத்துக்கு பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று விளக்கினார்.

கிறிஸ்மஸ் விழாவுக்கு முன்னதாக இன்னொரு கருத்தமர்வு, ஒழுங்கு செய்வதாகவும் அதுவரை பங்கு செய்திகளை தமக்கு அனுப்பி வைக்குமாறும் ஆசிரியர் அருட்பணி றொஷான் அடிகள் கேட்டுக் கொண்டார்.

றிச்சேட் – அடைக்கலநாயகி
குருநகர் செய்தியாளர்

## விண்ணக வாழ்வில் 4ம் ஆண்டு நிறைவு



அமரர்
அருட்பணி. வஸ்ரியாம்பிள்ளை பொனிப்பஸ்

அன்னை மடியில்
14-05-1947

இறைவன் மடியில்
27-08-2007

நற்குருவாய்
நோயாளிகளைத் தொட்டுக்
குணப்படுத்தி
நல் வழிகாட்டி பங்கு வாழவும்,
மறைமாவட்டம் உயரவும்
உழைத்த உங்கள்
வாழ்வை நினைக்கின்றோம்...
செபிக்கின்றோம்....

தாய், சகோதரங்கள்,
உற்றார், உறவினர்,
குருக்கள், நண்பர்கள்.

## பாதுகாவலன் வினா விடை போட்டி II

மிருசுவில், பளை பங்கில் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படும் பாதுகாவலன் பத்திரிகை போட்டி II நடாத்தப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டது. பரிசு பெற்றவர்கள்:-
J. ஜொய்சி - பளை
T. டியோன் - மிருசுவில்
G. பிரகாஸ் - கச்சாய்

பரிசில்களை அருட்சகோதரன் செபஜீவன் வழங்கி கௌரவித்தார் என மிருசுவில் நிருபர் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

## கிளி. முல்லை.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகள் புனித திரேசாள் ஆலயத்தில் ஒவ்வொரு பங்கினதும் இரண்டு பிரதிநிதிகளை இணைத்து நடாத்தப்பட்டது. இவ் நிகழ்வானது காலை 10.00 மணிக்கு பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து அருட்பணி செபஸ்ரியன எஸ்தாகூர் தலைமையில் இளைஞர் யுவதிகள் சகிதம் கிளிநொச்சி மேய்ப்பு பணியகத்துக்கு கொண்டுவரப்பட்ட திருச்சிலுவை கிளிநொச்சிப் பங்கின் உதவிப் பங்குத்தந்தை அருட்பணியாளர் மைக் மயூரனாலும், கிளிநொச்சி இளைஞர் யுவதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருச்சிலுவை அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைக்கப்பட்டு பவனியாக திரேசாள் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது. கொண்டுவரப்பட்ட திருச்சிலுவை அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டவுடன் நற்கருணை ஆராதணை கிளி – முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் யாவிஸ் அடிகளார் தலைமையில் நடைபெறறது. அதனை தொடர்ந்த கிளி – முல்லை மறைக்கோட்டத்தின் இளையோர் தினம் நிகழ்வுகள் அருட்பணியாளர் கனிசியஸ் றாஜ் தலைமையில் நடை பெற்றன. அந்நிகழ்வின் சிறபபு நிகழ்ச்சியாக "கிறிஸ்தவ இளையோரின் பங்களிபபு" என்ற தலைப்பில் ஆசிரியர் திரு. யூடா சதீஸ்குமார் அவர்கள் சிறப்பான முறையில் தனது கருத்துகளை அனுபவப் பகிர்வோடு பகிர்ந்துகொண்டார். தொடர்ந்த "ரசிகன்" என்னும் இளையோருக்கான குறுமபடம் மூலம் சமூகத்தில் இளையோரின் பங்கு என்ன என்பதை அருட்பணியாளர் கனிசியஸ்றாஜ் சிறப்பாக எடுத்துரைத்தார். இறுதியாக மறைக் கோட்ட ரீதியான இளையோர் நிகழ்வுகள் பிறபகல் 3.00 மணியளவில் நிறைவுற்றது.

## துன்புறுவோரைக்.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

தினப் பாடகர் குழு இசைக்கத தொடங்கியது.

இத்திருப்பலியின் இறுதியில் இஸ்பெயினின் 16ம் நூற்றாண்டு மறையுரையாளர் அவிலா நகர் புனித ஜானை, அகிலத் திருச்சபையின் மறை வல்லுநர் என அறிவித்தார் திருததந்தை 16ம் பெனடிக்ட். கடும் வெயிலையும் பொருட்படுத்தாது பேராலயத்திற்கு வெளியேயும் பல்லாயிரக்கணக்கானோர் நின்று கொண்டு இத்திருப்பலியில் பங்கு பெற்றனர். இத்திருப் பலி முடிந்ததும், திருத்தந்தை நீடூழி வாழ்க Viva il Papa என்று இளையோர் ஆரவாரித்துக் கொண்டே இருந்தனர். இத்திருப்பலிக்குப் பின்னர் மத்ரித் பேராயர் இல்லம் சென்று கர்தினால்கள், ஆயர்கள் மற்றும் பிற பிரமுகர்களுடன் மதிய உணவருந்தினார் திருத்தநதை. இச்சனிக கிழமை இரவு மத்ரித் விமான நிலையத்தில் இளையோரின் திருவிழிப்பு இடம் பெறுவது இந்நாளைய முக்கிய நிகழ்ச்சியாக இருக்கின்றது. இந்த நான்கு நாள் பயணத்தை முடித்து உரோம் திரும்புனார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

## சாவகச்சேரியில் இரத்ததான நிகழ்வு

இளையோர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் சாவகச்சேரி பங்கின் கத்தோலிக்க இளைஞர்கள் நாற்பது பேர் அத்தினத்தில் குருதி தானக் கொடையினை மேற்கொண்டனர் என சாவகச்சேரி செய்தியாளர் பிரியதர்சினி பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

## சிறுபான்மையினர், பெரு.... (5ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது அதற்காக அந்நியர்களின் உதவிகளை நாடும் வகையில் எமது சகோதரர்கள் தள்ளப்படுவதற்கு இடமளிப்பதும் எமது தேசிய சிரேஷ்டத்துவத்துக்கு கரும்புள்ளியகிவிடும் என்பனை நாம் சிந்திக்க வேண்டும்.

**தனிப்பட்ட உணர்வுகள்**

இலங்கை புனித பூமியானது பேதங்கள் அற்ற கௌரவத்துக்கு ஆளாகின்ற நாடாகும். அந்த கௌரவத்தை நாம் இழக்கக்கூடாது. சிங்களம், தமிழ், முஸ்லிம், பௌத்தம், இந்து கிறிஸ்தவம் என பிரிந்து நிற்காமல் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதற்காக நாம் எமது தனிப்பட்ட உணர்வுகளை தியாகம் செய்ய தயாராக வேண்டும். எமது அன்புக்குரிய தேவ அன்னையானவர் உலகின் பல் இடங்களில் தரிசனமாகி பல்வேறு புதுமைகளை செய்து அற வாழ்க்கையின் பெறுமதியை எடுத்துக் காட்டியுள்ளார்.

**மீட்டுத்தருமாறு பிரார்த்தனை**

1942ஆம் ஆண்டு இலங்கை ஜப்பானின் குண்டு தாக்குதலுக்கு இலக்காகுவதற்கு இருந்தபோது அப்போது கொழும்பு பேராயராக இருந்த வணக்கத்துக்குரிய ஜோன்மசோன் ஆண்டகை தேவத்தை லூர்து மாதா ஆலயத்துக்கு சென்று அன்னை முன்னிலையில் முழங்காலிட்டு இலங்கையை மீட்டுத் தருமாறு பிரார்த்தனை செய்ததனை நாம் மறந்துவிடக் கூடாது. அன்னையின் மத்தியஸ்தத்தில் அந்த உதவி அன்று எமக்கு கிடைத்தது. அந்த நேரத்தில் இலங்கை தப்பியமை ஒரு புதுமையாகும். சிங்கப்பூர் பர்மா ஆகிய நாடுகளை பிடித்துக் கொண்ட ஜப்பான் அன்று இலங்கைக்கு வரவில்லை. இன்று நாம் அவரை இலங்கை மாதா என்று அழைக்கின்றோம். பாடல்களை பாடுகின்றோம். அதுமட்டுமின்றி அன்னையின் திருச்சொரூபம் நாடு முழுவதும் வழிபாட்டுக்காக சென்றதையடுத்தே இரண்டு வருடங்கள் போர் நிறுத்தம் நாட்டில் அமுலில் இருந்தது. அன்பு கருணை என்பனவையே அற வாழ்க்கையின் முக்கிய அம்சங்களாகும். அன்பையும் கருணையையும் செயற்படுத்தும்போது ஒற்றுமை ஏற்படுகின்றது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2011 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.